10-2-2020
O.S.178/2015
வா.சா.2 திரு.கன்னையன்

வா .சா. 2 சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.
குறுக்கு விசாரணை..

2ம் வாதி ராஜேந்திரன் எனக்கு உறவினர் இல்லை. வாதிகளை தெரியும் ஆனால் உறவினர்கள் இல்லை. பிரதிவாதிகளை தெரியும். பிரதிவாதிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் அந்த வகையில் தெரியும்., நான் பம்பாரப்பட்டியில் குடியிருக்கிறேன். அது செம்மாண்டப்பட்டியை ஒட்டினாற்போல் இருக்கிறது. குப்பக்கவுண்டர் என்பவரை தெரியும். அவரை எனக்கு பரம்பரையாக தெரியும். நான் விவசாயம் செய்கிறேன். விவசாய நிலங்கள் எனக்கு சொந்தமாக செம்மாண்டப்பட்டி மற்றும் பம்பாரப்பட்டியில் இருக்கிறது. நான் கம்யூனிஸ்ட் கட்சியில் ஒன்றிய செயலாளராக இருக்கிறேன். எனக்கு குழந்தைகள் இல்லை. 2ம் வாதி ராஜேந்திரன் நுகர்வோர் சங்க தலைவராக இருக்கிறாரா என்றால் தெரியாது. உபயவாதிகளின் தகப்பனார் குப்ப கவுண்டர் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார். அப்போது எனக்கு 13, 14 வயது . எனது முதல் விசாரணையின்படி பார்த்தால் 40 வருடங்களுக்கு முன்னர் எனக்கு 10 வயது என்பது சரிதான். குப்பக்கவுண்டருக்கு கிரையம் மூலம் தாவா சொத்து பாத்தியப்பட்டது. 9-4-1945 கிரையம் மூலம்அது குப்பக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அந்த கிரய விபரம் சொல்ல கேட்டிருக்கிறேன். ஆவணங்களையும் பார்த்திருக்கிறேன். எனக்கு எழுத படிக்க தெரியும். முத்துக்கவுண்டர் மற்றும் லட்சுமியம்மாள் ஆகிய 1,5 பிரதிவாதிகள் 7-6-1978 ல் கிரையம் வாங்கியிருக்கிறார்கள். அது 4 ஏக்கர் 57 செண்ட் விஸ்தீரணம் உள்ளது. அந்த கிரைய ஆவணத்திற்கு நான் சாட்சியில்லை. 6 முதல் 11 பிரதிவாதிகள் வாங்கிய கிரைய விபரம்தெரியுமா என்றால் 30-4-2015 ல் கிரையம் வாங்கியிருக்கிறார்கள் தெரியும். அந்த கிரைய ஆவணத்தில் நான் சாட்சியாக இல்லை. அந்தஇடத்தை நானும் வாங்கி கொடுக்கவில்லை. 2ம் வாதியின் தகப்பனார் துரைசாமி கவுண்டர் என்பவரை தெரியும். குப்பக்கவுண்டரின் வாரிசுகள் அனைவரும் ஒன்றாக இருந்தார்கள். பழனிக்கவுண்டர் மற்றும் முத்துக்கவுண்டர் ஆகியோர் ஒரு வீட்டிலும், மற்றும் குழந்தை கவுண்டர் , துரைசாமி கவுண்டர் ஆகியோர் ஒரு வீட்டிலும் அனுபவித்தில் இருந்தார்கள் என்றால் இல்லை ஒரே வீட்டில் குடியிருந்தார்கள். மாணிக்க கவுண்டர் செம்மாண்டப்பட்டியில் இருந்தார். அப்போது அவர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலை பார்த்தார். பழனிக்கவுண்டரும், முத்துக்கவுண்டரும், குழந்தை கவுண்டரும் துரைசாமி கவுண்டரும் ஒரே வீட்டில்தான் இருந்ததாகவும்அவர்கள் இரண்டு வீடுகளில் தனித்தனியாக இருந்ததாக

நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் மாணிக்க கவுண்டர் வேலை பார்த்த அமரகுந்தி கிராமத்தில் குடியிருந்ததாகவும் 1998 க்கு பின்னர் செம்மாண்டபட்டிக்கு குடி வந்ததாகவும் அதற்கும் முன்பு வரை வேலை பார்க்கும் ஊர்களில்தான் இருந்து வந்ததாகவும் சொன்னால் சரியல்ல. குப்பக்கவுண்டர் 1970 ல் அவருக்குசொந்தமான சொத்துக்களை வாய்மொழியாக பிரித்து வாதிகளுக்கு கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு வாய் மொழி பாகம் நடந்த சமயத்தில் நான் சிறு பிள்ளை என்றும் அதனால் அந்த விவரம் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. குப்பகவுண்டர் இறந்து 50 வருடங்கள் ஆகிறது என்றும் குப்பகவுண்டரின் மகள்கள் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்த பின்னர் ராஜேந்திரன் அவரது தாயார் மற்றும் சகோதரிகள் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும் சொல்வது சரியல்ல. 1 ம் வாதி எனது கன்ட்ரோலில் என்னிடம் வேலை பார்த்து வருவதாக சொல்வது சரியல்ல. துரைசாமி கவுண்டர் மற்றும் குழந்தை கவுண்டர் ஆகியோர் ஒன்றாக இருந்ததாகவும் அவர்கள் இருவரும் என் அப்பாவின் கீழ் தான் வேலை பார்த்து வந்ததாகவும் சொன்னால் சரியல்ல. அவர்கள் எங்களை விட வசதியாக இருக்கிறார்கள். எனது தகப்பனாருக்கும் எங்கள் பங்காளிக்கும் இடையில் ஒரு சிவில் வழக்கு நடந்ததாகவும் அதில் வாதிகளின் தகப்பனார் குப்பாக்கவுண்டர் சாட்சி சொல்லியிருப்பதாகவும் சொல்வது சரியல்ல. அவ்வாறு குப்பாகவுண்டர் சாட்சி சொல்லியிருப்பதால் ராஜேந்திரனுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி ராஜேந்திரனுக்கு இரண்டு மனைவிகள் என்றும் முதல் மனைவியிடம் விவாக ரத்து வாங்கி விட்டதாகவும் இரண்டாவது மனைவியிடம் தற்போது இருந்து வருவதாகவும் சொல்வது சரிதான். முதல் மனைவிக்கு வாதி ராஜேந்திரன் எவ்வளவு ஜுவனாம்சம் கொடுத்தார் என்பது எனக்குதெரியாது. குப்பகவுண்டருக்கு என்னென்ன சொத்துக்கள் பாத்தியம் என்றால் சர்வே எண் 260, 224/3, 224/4, ஆகிய சொத்துக்கள் பாத்தியம். சர்வே எண் 93, 99 ஆகிய சர்வே நெம்பர்களிலும் சொத்துக்கள் குப்பாகவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அவைகளை தவிர்த்துவேறு சொத்துக்கள் இல்லை. வாதிகள் 1998 ல் சர்வே நெம்பர் 260/ஏ பி சி நிலத்தை கொல்லுக்காயன் என்கிற பச்சாகவுண்டருக்கு கிரையம் கொடுத்து விட்டதாக சொல்வது சரியல்ல. வீட்டு நிலத்தை முத்துக்கவுண்டர், பழனிசாமி , வெங்கடாசலம் ஆகியோருக்கு விற்பனை செய்து விட்டதாக சொல்வது சரியல்ல., சர்வே எண் 224/3,4 நிலத்தை குழந்தை கவுண்டர் துரைசாமி கவுண்டர் குடும்பம்சேர்ந்து மாணிக்கக்கவுண்டர் மகளுக்கு விற்பனைசெய்து விட்டதாக சொல்வது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சான்றை நான் கண்ணாடிஇல்லாமல் படிக்க முடியாது. 7-6-1978 ஆவணப்படி தெய்வாணை என்பவரிடமிருந்து முத்துக்கவுண்டர், லட்சுமியம்மாள் ஆகியோர் கூட்டாக

கிரையம் வாங்கியிருப்பதாக சொன்னால் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்து மானாவாரி நிலமாகும். அது 2 ஏக்கர் 8 செண்ட் விஸ்தீரணமாகும். குப்பாகவுண்டருக்கு 5 மகன்கள் 4 மகள்கள். 2.08 ஏக்கர் விஸ்தீரணத்தில் கிடைக்கும் வருமானத்தை கொண்டு இதர சொத்துக்கள் கிரையம் வாங்க முடியாது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. குப்பாகவுண்டர் வாய் மொழியாக பாகம் பிரித்துகொடுத்து விட்டதாகவும்அது முதல் அவரவர் பாக சொத்தில் அவரவர் குடியிருந்து வருவதாகவும் சொன்னால் சரியல்ல. பழனிகவுண்டருக்கு திருமணம் ஆகவில்லை என்றும் அதனால் பழனிகவுண்டரும் முத்துக்கவுண்டரும ஒரே வீட்டில் குடியிருந்ததாக சொல்வது சரியல்ல. 1978 க்கு பின்னர் தனித்தனியாக சாப்பாடு, தனித்தனியாக வீடுகள் இருந்ததாக சொல்வது சரியல்ல. குப்பக்கவுண்டரின் மகள்கள் அவர்களது தாயார் சொத்தில் பாகம் கேட்பதாகவும் அதனை இல்லை என்று சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை என்று சொல்வது சரியல்ல. குழந்தை கவுண்டரின் மனைவி இறந்து விட்டதாகவும் அவருக்கு வாரிசுகள் இல்லை என்றும் சொல்வது சரிதான். குழந்தை கவுண்டர் துரைசாமி கவுண்டரின் பாகத்தை ராஜேந்திரன் அனுபவித்து வருவதாக சொல்வது சரியல்ல. வாதிகள் ஏற்கனவே பாகம் பெற்றுக்கொண்டதாகவும் மீண்டும் பாகம் கோரி வருவதாகவும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. குப்பாகவுண்டர் இறந்து 50 வருடங்கள் ஆகிவிட்டதாகவும் 5 தலைமுறைகள் கடந்து விட்டதாகவும் இதுவரை பாகம் பிரிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகள் இன்னும் கூட்டு சுவாதீனத்தில் இருக்கிறார்கள். இன்றைய தேதியில் சாப்பாடு தனியாகவும் நிலம் கூட்டாகவும் இருந்து வருகிறது. மாணிக்க கவுண்டரின் மகன் என்ன செய்கிறார் என்று தெரியாது. ராஜேந்திரனின் சகோதரிகள் திருமணமாகி தனித்தனியாக போய் விட்டதாக சொல்வது சரியல்ல. முத்துக்கவுண்டரின் குழந்தைகள் தனித்தனியாக போய் விட்டார்கள் என்பது சரிதான். ராஜேந்திரன் வீட்டு வரி ரசீதுகள் மற்றும் நில வரி ரசீதுகள் தாக்கல் செய்திருக்கிறார். ராஜேந்திரன் சொல்லிக்கொடுத்து அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்து குப்பாகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், 3,4 அயிட்ட சொத்துக்கள் 4,5 பிரதிவாதிகள் தனிப்பட்ட வருமானத்தில் வாங்கிய கிரைய சொத்துக்கள் என்றும் சொல்வது சரியல்ல. மேற்கூறிய கிரையங்களுக்குஆவணங்கள் இருப்பதாகவும் நான் வேண்டுமென்றே கண்ணாடிஇல்லாமல் படிக்க முடியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தை ராஜேந்திரன் விற்பனை செய்துதான் அவரது முதல் மனைவிக்கு ஜுவனாம்சம் கொடுத்ததாகவும் மற்றும் கடன்களை

தீர்த்ததாகவும் அந்த விவரம் எனக்கு தெரியும் என்று சொல்வது சரியல்ல. குப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தங்களுக்குபாத்தியப்பட்ட பாகத்தை குழந்தை கவுண்டர் மற்றும் துரைசாமி கவுண்டர் ஆகியோர் விற்பனை செய்து விட்டதாகவும் தற்போது மறுபடியும் 1/3 பாகம் கேட்டு வருவதாகவும் சொல்வது சரியல்ல. உண்மையில் நடந்த விவரங்கள் தெரியாது என்று நான் சொல்கிறேன் என்றும் பல வருடங்களுக்கு முன்பு வரை நடந்ததை தேதியுடன் நான் சொல்வதாகவும் எழுதி படித்து வைத்துக்கொண்டு பொய் சாட்சி சொல்வதாகவும் சொன்னால் சரியல்ல. குப்பாகவுண்டர் எனக்கு 10 வயதாக இருக்கும்போதே சொத்தை பிரித்து விட்டார் என்றும் அந்த விவரம் அப்போது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவ்வாறு சொத்திற்கு அருகில் பல குடியிருப்புகள் இருப்பதாகவும் அவர்களை விட்டுவிட்டு என்னை அழைத்து வந்து சாட்சி சொல்ல வைத்திருப்பதாக சொல்வது சரியல்ல. எனது தகப்பனார் குப்பகவுண்டரும் வாதிகளின் தகப்பனார் குப்பகவுண்டரும பங்காளிகள் என்றும் குழந்தைகவுண்டர் மற்றும் துரைசாமி கவுண்டர் ஆகியோர் எங்கள் நிலத்தை குத்தகைக்கு ஓட்டி வருவதாகவும் தற்போது வழக்கிற்காக உறவுகளை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு உண்மையான விவரங்களை தெரியும் என்றும் ஆனால் அவைகளை மறைத்து நான் பொய் சாட்சி சொல்வதாகவும் அதனால் எனது சாட்சியம் ஏற்கமுடியாது என்பது சரியல்ல.

மறு விசாரணை..இல்லை.

Sd/- Kannaiyan　　　　Sd/- III ADJ Salem.